பிரசார் பாரதி: புதிய பார்வை

நாடாளுமன்றத்தின் பல்வேறு உயர்நிலைக் குழுக்கள் செவ்வனே ஆராய்ந்து, அவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே 'பிரசார் பாரதி'. 'பிரசார் பாரதி'யின் இரு கண்களே ஆல் இண்டியா ரேடியோ மற்றும் தூர்தர்ஷன்.

அரசு மானியம் பெறும் ஒலி ஒளி ஊடகங்கள், எந்தச் சூழ்நிலையிலும் நடுநிலைமை தவறாமல் அரசின் மானியம் பெற்றாலும் அரசை சார்ந்து இருக்காமல் தனித் தன்மையோடு செயல்படவும் உருவாக்கப் பட்டதே 'பிரசார் பாரதி'. அதற்கான காப்பினையும் கவசத்தினையும் அளிப்பதற்காக நிறைவேற்றப்பட்ட 'பிரசார பாரதி' சட்டம் இதனைக் குறைவில்லாமல் தடையில்லாமல் வழங்குகிறது என்பதுதான் உண்மை.

அரசுத் துறையாக இயங்கிய ஆல் இண்டியா ரேடியோ மற்றும் தூர்தர்ஷன் அவற்றின் பிடியிலிருந்து விடுபட்டு நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டக்காப்பின் துணையுடன் 'பிரசார் பாரதி' என்ற அமைப்பாக இயங்க வேண்டும் என்ற நோக்கத்தின் பின் புலத்தினை சற்றே ஆராய்வது நல்லது. ஆரம்ப காலங்களில் இந்தியாவின் ஒலி ஒளி ஊடகங்களாக இந்த இரண்டு மட்டும்தான் இயங்கின. உலகமயமாக்கத்தின் விளைவு, தொழில்நுட்பத்தின் அபரிமித மான வளர்ச்சி என்ற இவ்விரண்டின் காரணமாக தனியார் துறையிலும் ஒலி ஒளி ஊடகங்கள் ஏற்படத் தொடங்கின. இந்தச் சூழலில் ஆல் இண்டியா ரேடியோ மற்றும் தூர்தர்ஷன், தனது பொதுநலச் சேவையிலிருந்து விடுபட்டு, தனியார் சந்தையில் விலைபேசப்படும் ஒரு பொருளாக மாறிவிடக் கூடாது என்ற உயர்ந்த எண்ணத்துடன் 'பிரசார் பாரதி' உருவாக்கம் பெற்று பதினைந்து ஆண்டுகள் கடந்து விட்டன.

'பிரசார் பாரதி' இயங்கத் தொடங்கியவுடன் எதிர்கொண்ட சிக்கல்கள், சவால்கள், சலனங்கள் ஒன்றல்ல இரண்டல்ல. குறிப்பாக, புதிய பணியாளர்களை நியமிப்பதிலோ, தற்போது பணியில் இருப்பவர்களுக்கு சலுகைகள் மற்றும் முன்னேற்றங்கள் செய்து தருவதிலோ, அரசின் முன் அனுமதி வேண்டும் என்பது 'பிரசார பாரதி' சட்டத்தின் விதிகளின்படி கட்டாயமாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே, பணியில் இருப்பவர்களுக்கு அல்லது திறம்பட இயங்குபவர்களுக்கு பணி உயர்வு கொடுத்து ஊக்கப்படுத்தும்முயற்சிகள் பல வற்றிலும் தொய்வு ஏற்பட்டன. இதனால், திறமையான பலரும் இந்த இரண்டு ஊடகங்களிலிருந்தும் விடுபட்டு தனியார் ஊடகங்களில் அடைக்கலம் பெற்றனர். இவ்விரண்டு ஊடகங்களிலும், காலத்தின் கட்டாயத்தால் பணியும் அதிகரித்தது, பணியாளர்களும் குறைந்து போயினர்.

ஒலி ஊடகத்தின் பழைய முறை நிகழ்ச்சி அமைப்பிலிருந்து விடுபட்டு புதிய உத்வேகத்துடன் செயல்பட்டு நேயர் நெஞ்சங்களைக் கவர்ந்த பெருமை பண்பலை வானொலிக்கு உண்டு. இந்தியாவைப் பொருத்த வரை, இதற்கான முன்மொழிதலை 'ஆல் இண்டியா ரேடியோ' செய்திருந்தாலும், அண்மைக்காலமாக தனியார் பண்பலை வானொலிகள் அதனைத் திறம்பட செய்ததால் ஆல் இண்டியா ரேடியோவின் நேயர் கூட்டம் கூண்டோடு தடம் பிரிந்தது. ஐந்து நிமிடத்தில் அசத்திய தென்கச்சி சுவாமி நாதனின் 'இன்று ஒரு தகவல்' போன்ற நிகழ்ச்சிகள் ஒன்றுகூட தற்போது அரங்கேறவில்லை என்பதுதான் உண்மை. ஆல் இண்டியா ரேடியோவின் பண்பலை ஒலிபரப்பின் தரத்தை எப்படி உயர்த்த முடியும் என்பதுதான் இன்று மிகப்பெரிய சவாலாக உள்ளது.

வி.ஏ.எம். ஹுசைன்

'பிரசார் பாரதி' எதிர்நோக்கும் சவால்களுள் மிகவும் முக்கியமானது தொழில் நுட்பப் பிரச்னைகள் என்பதனை சற்றே அழுத்தமாகக் குறிப்பிட வேண்டும். ஆல் இண்டியா ரேடியோவின் இரு கைகளாகக் கருதப்பட்ட மீடியம் அலைவரிசை மற்றும் குறைந்தழுத்த அலைவரிசை ஒலிபரப்புகளை இன்று சீந்துவாரில்லை. சரியான காலகட்டங்களில் விரைவாகச் செயல்பட்டு இந்தக் குறையினை போக்கி இருக்கலாம். தரைவழி ஒலி ஒளி ப்ரப்பில், 'டிஜிட்டலைசேஷன்' என்ற புதிய தொழில்நுட்ப முறையினை நுழைப்பது அறவே இல்லாமல் போயிற்று. இதன் விளைவு செலவுகள் அதிகமாயின, நேயர்கள் வெளியேறி விட்டனர். 'யாகி' என்ற ஆண்டினாவை உபயோகித்து நிகழ்ச்சிகளை தரை சேர்க்கும் முறை குறைந்து வருவதும் ஒரு குறைபாடாகவே தென்படுகிறது. இவைகளுக்கும் மேலாக, தொழில்நுட்ப வசதிகளைப் பெருக்குவதற்கான பொருள் உதவி அரசிடமிருந்து காலதாமதமாகக் கிடைப்பதால், புதிய தொழில் நுட்பங்களை, உரிய நேரத்தில் வாங்குவதிலும் சிக்கல் ஏற்படுகிறது. அல்லது வாங்கும் தருவாயில் திட்டகாலம் முடிவடைந்து விடுவதால், தொழில்நுட்பத்தினை தக்க சமயத்தில் ஏற்பது என்பது ஒரு பகற்கனவாகவே மாறி விடுகிறது. சுருங்கச் சொன்னால், புதிய தொழில்நுட்பத்தை ஆர்வமாகவும் தீவிரமாகவும் ஏற்றுக்கொண்டு, தனியார் ஊடகங்களுக்கு இணையாக பணியும் புதியதலைமுறை பணியாளர்களும் இல்லாமல் போனதும் ஒரு முக்கிய காரணம். தொழில்நுட்பத்தைப் பொருத்த வரை, பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற பேருண்மை பல காலமாகவே இவ்விரண்டு ஊடகங்களில் பொய்த்துப் போய்விட்டது என்பது மிகையான கூற்றல்ல.

வாசகர்களுக்கு அதிர்ச்சியாகவும் அதிசயமாகவும் இருக்கலாம், ஆனால் இதுவே பேருண்மை. ஆல் இண்டியா ரேடியோ மற்றும் தூர்தர்ஷன் பணியாளர் சம்பளத்திற்காக, அரசு ஒரு மாதத்தில் நூற்றி ஐம்பது கோடி ரூபாய் செலவழித்தாலும், நிகழ்ச்சி அமைப்பிற்காக செலவிடும் தொகை, 'பிரசார் பாரதி'யின் ஒட்டுமொத்த செலவில் ஐந்தே ஐந்து விழுக்காடு என்பது வேதனை கலந்த உண்மை. நிகழ்ச்சியின் தரம், உயர்வு, புத்தாக்கம், புதுமை, கலையம்சம் குறைவதற்கு இதைவிட வேறு என்ன காரணம் இருக்க முடியும்? நல்ல நிகழ்ச்சிகளை அளிக்க வேண்டும் என்பதினை 'பிரசார பாரதி' சட்டத்தின் பன்னிரண்டாவது விதி, கட்டளையாகச் சொல்கிறது. ஆயினும் ஐந்து விழுக்காடு மட்டும் கலைநிகழ்ச்சிக்காக அல்லது நிகழ்ச்சி அமைப்பிற்காக செலவழித்தால், இவ்விரண்டு ஊடகங்கள் நேயர் நெஞ்சங்களில் எப்படி தடம் பதிக்க முடியும் என்பதுவே மிகப்பெரிய கேள்விக்குறி.

கலைவாழ்க்கை வேறு. தொழிற்சாலை கலாச்சாரம் வேறு. போனஸ், பஞ்சபடி, ஆறரை மணி வேலை நேரம் என்ற இப்படியான சிறுவட்டங்களிலிருந்து என்றுமே கலைப்பெட்டகங்களை உருவாகுவதில் பல நடைமுறை சிக்கல்கள் இருக்கத் தான் செய்கின்றன. அரசின் செயல்முறை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, ஒரு செம்மையான கலைச்சூழலை உருவாக்குவது, அதுவே இன்றைய காலகட்டத்தில் கடினமான விஷயம். மண்ணெண்ணெய்யும் நல்லெண்ணையையும் கலந்தால் எரியூட்டுவதிலும் சிரமம். கல்வித் தகுதி, நுழைவுத் தேர்வு இவைகளுக்கு அப்பாற்பட்டு கலை அர்ப்பணம் மற்றும் கலை ஆர்வம் மேலோங்கி நிற்கும் பணியாளர்களைத் தேடிப்பிடித்து, இந்த அரசு மானியம் பெறும் ஊடகங்களில் வேலைக்காகக் கொண்டு வருவது, எளிதான காரியமல்ல. முன்பே கூறியதைப் போன்று, புதிய தலைமுறை தொழில்நுட்பங்கள் பழைய தலைமுறை பணியாளர்கள் என்ற இந்த இரண்டையும் ஒருங்கிணைப் பதிலுள்ள சிக்கல்களையும், சிரமங்களையும் 'பிரசார் பாரதி' நன்றாகவே அறிந்துள்ளது. ஆதலாலேயே, எல்லா நிலைகளிலும், எல்லா பணிகளிலும் புறத்திறன் சேவை இன்று தவிர்க்க முடியாத நிலைக்கு வந்து விட்டது. இதை எதிர்ப்பதால், நிறுவனத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் நீண்டகால முன்னேற்றமும் குறைபட்டுப் போகும் என்பதில் ஐயமில்லை.

'பிரசார் பாரதி' என்ற அமைப்பு சந்திக்கக் கூடிய அறைகூவல்கள், சவால்கள், சிக்கல்கள் ஒருபுறம் இருக்க, 'பிரசார் பாரதி' என்ற அமைப்பின் திறன்கள், சக்திகள், பெருமைகள் அபாரமானத் திறமைகள் யாவை என்பதைப் பற்றியும் குறிப்பிடத் தான் வேண்டும். உலகளவில் மிகப்பெரிய ஒலி ஒளி ஊடகங்களுள் ஒன்றாக 'பிரசார் பாரதி' அமைப்பு இன்றும் குறிப்பிடப்படுகிறது. பிரசார் பாரதியின் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள், அதிக மக்களைச் சென்றடையும் டி.டி.எச். சேவை, நாற்பதுக்கும் மேற்பட்ட சானல்கள் என்று கூறிக்கொண்டே போகலாம். 'பிரசார பாரதி'யின் ஆவணக் களஞ்சியம் அள்ள அள்ளக் குறையாத தங்கச் சுரங்கம். அதனை நன்கு நிர்வகித்தாலே பல கோடி பணமாக ஈட்டலாம் என்பது யாவரும் அறிந்ததே. அண்மைக் காலமாக, 'பிரசார் பாரதி'யின் நேரடிச் சேவை எதிர்பார்த்த தற்கு மேலாகவே வருவாயைப் பெற்றுத் தந்தது: மிகுந்த போட்டிகளுக்கிடையே 'பொதிகை' கூட நல்ல வருவாயினை ஈட்டி வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் 'பிரசார் பாரதி' டி.டி.எச். சேவையின் பன்முகப் பரிமாணத்தை மேலும் விரிவுபடுத்தி 'டேட்டா சர்வீஸ்' வசதிகளை அதிகரித்து வருவாயினைப் பெருக்கலாம். 'பிரசார் பாரதி'யின் ஒலி ஒளி ஊடகங்கள் இண்டெர்நெட் சேவையோடு இணைவது காலத்தின் கட்டாயம். இப்படிச் செய்வதால், புதிய நேயர்களோடு தொடர்பு கொள்ளவும், இளைஞர் கூட்டத்தை ஈர்த்துக் கொள்ளவும் முடியும். இத்துடன், 'பிரசார் பாரதி'யின் வெளிநாட்டு சேவையை மேலும் மெருகூட்ட முடியுமானால் புதிய நேயர்களையும் புதிய வருவாய் கதவுகளையும் திறக்கவுதுவாக இருக்கும். கி.என்.என். மற்றும் பி.பி.சி. போன்ற வெளிநாட்டு ஒலி ஒளி ஊடகங்களுடன் இணைந்து செயல்பட்டால், இந்த ஊடகங்களுக்கான நேயர் கூட்டம் இன்னும் பல கோடிகளாக அதிகரிக்க வாய்ப்புண்டு. இந்தியாவிற்குள்ளேயே, பல்வேறு அரசுத் துறைகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு, மக்கள் நலன் கூறும் மகத்தானத் திட்டங்களை, இந்த ஊடகங்கள் வாயிலாக மக்களிடம் கொண்டு சேர்ப்பதால் 'பிரசார் பாரதி'யின் பொது ஜன சேவை ஒலிபரப்புகள் மேலும் பல சரித்திரம் படைக்கும் என்பது திண்ணம்.

நவ.12: தேசிய பொதுச்சேவை ஒலிபரப்பு தினம்.

கட்டுரையாளர்:
உறுப்பினர், பிரசார் பாரதி குழுமம்,
புது தில்லி.

எமக்காளர் இருவர் மனைங்கனர்